தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சிநிலையம் - ஆடுதுறை

# தஞ்சாவூர் மாவட்டவானிலைசார்ந்தவேளாண் அறிக்கை

(24.04.2024 முதல் 28.04.2024)

அறிக்கைஎண்: 07/2024 தேதி : 23.04.2024

## தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38 - 39 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 29 °செ ஆகவும் பதிவானது.

## தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (24.04.2024 முதல் 28.04.2024).

| கடந்த வார வானிலை (18.04.2024 முதல் 22.04.2024) | | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (24.04.2024 முதல் 28.04.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 18/04 | நாள்-2 19/04 | நாள்-3 20/04 | நாள்-4 21/04 | நாள்-5 22/04 | தேதி | நாள்-1 24/04 | நாள்-2 25/04 | நாள்-3 26/04 | நாள்-4 27/04 | நாள்-5 28/04 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 39 | 39 | 39 | 39 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 39 | 39 | 39 | 40 | 39 |
| 29 | 29 | 29 | 29 | 29 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 28 | 28 | 27 | 27 | 28 |
| 4 | 5 | 5 | 5 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 3 | 1 | 2 | 3 | 4 |
| 71-55 | 73-56 | 69-55 | 73-55 | 74-58 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-40 | 80-40 | 80-40 | 80-40 | 80-40 |
| 4 | 5 | 5 | 5 | 4 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 12 | 12 | 12 | 12 | 14 |
| தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | காற்றின் திசை | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் தென் கிழக்கு |

## தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 24.04.2024 முதல் 28.04.2024 ஆகிய தினங்களில் மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 39 - 40 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 12 – 14 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | ஏதிர்பார்க்கப்படும் வானிலையை கருத்தில் கொண்டு கோடை உழவு செய்யவும் |
| பயறுவகை | அறுவடை | முதிர்ந்த உளுந்து மற்றும் பாசிபயறு பயிர்களை அறுவடை செய்யவும். |

| | | |
|---|---|---|
| பயிர்கள் | | அறுவடை செய்த பயிரை வெயிலில் காய வைத்து பின்பு பயறைப் பிரித்தெடுத்து சுத்தம் செய்து சேமிக்கவும். |
| தென்னை | | தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிற்ப்பதற்க்கு ஒரு பாக்கெட் தென்னை டானிக்கை 200 மி.லி வேர் மூலம் கொடுக்க வேண்டும். |
| கால்நடைகளுக்கு | மாடு | கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்ப்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்ப்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3.0 மி.லி பியூடாக்ஸ் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் மூலம் துடைக்கவும். |

**குறுஞ்செய்தி**

ஏதிர்பார்க்கப்படும் வானிலையை கருத்தில் கொண்டு கோடை உழவு செய்யவும்

**இயக்குநர்**